# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 23: ஒரு குடம் எண்ணெய்

2இராஜாக்கள் 4:1-7

### நடந்த கதை . . .

அந்த இளம் விதவை கடன் வாங்கிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். தீர்க்கதரிசியிடம் வந்து விழுந்து, ''கடன் கொடுத்தவன் என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்திருக்கிறான்'' என்று அழுதாள். அவள் கணவன் மரித்துப்போனான்; ஏராளமாகக் கடன் இருந்தது. வேதாகமக் காலங்களில், கடன்பட்டவனின் சொத்தை கடன்கொடுத்தவன் அபகரிக்கலாம்; பிள்ளைகளை அடிமையாக்கலாம். யோபு 24:9.

''வீட்டில் என்ன இருக்கிறது?'' என்று எலிசா கேட்டார்.

அதற்கு அவள், ''ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை'' என்று பதிலளித்தாள். தன் வீட்டிலிருந்த மரச்சாமான்களையும், பொருட்களையும் ஒவ்வொன்றாகக் கடன்காரனிடம் ஏற்கனவே கொடுத்திருந்தாள். இப்போது அவளுடைய இரண்டு மகன்களும் அந்தச் சிறிய குடத்தில் கொஞ்சம் எண்ணெயும் தான் மிஞ்சியவை. ஒலிவ எண்ணெய் அத்தியாவசியமான ஒரு பொருள். விளக்கேற்றவும் சூடாக்கவும் சமைக்கவும், மருந்தாகவும் பயன்பட்டது.



பக்கத்து வீடுகளிலிருந்து காலிப் பாத்திரங்களை வாங்கிவர அவர்களிடம் எலிசா கட்டளையிட்டார். பாத்திரங்களை வாங்கி, கதவை மூடி, அந்தச் சிறிய குடத்திலிருந்த எண்ணெயைக் காலிப் பாத்திரங்களில் ஊற்றவேண்டும். எலிசா சொன்னபடிச் செய்தார்கள்; அற்புதம் நிகழ்ந்தது. வீட்டிலிருந்த பாத்திரங்கள் எல்லாம் நிரம்பும்வரைக்கும் குடத்திலிருந்து எண்ணெய் வடிந்துகொண்டே இருந்தது.

''இப்போது நாங்கள் என்ன செய்வது?'' என்று அந்த இளம் விதவை தீர்க்கதரிசியிடம் கேட்டாள்.

''நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக்கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம்பண்ணுங்கள்'' என்று சொன்னார். அந்த அற்புதத்தின்நிமித்தம், அந்த விதவையும் அவள் மகன்களும் சந்தோஷமாக, விடுதலைபெற்றுச் சென்றார்கள்.

சாத்தான் எனும் கொடிய வட்டிக்காரனிடமிருந்து ஆண்டவர் உங்களை விடுவிக்க விரும்புகிறார். தம்முடைய விசேஷித்த எண்ணெயால் உங்கள் பாத்திரம் நிரம்ப அவர் ஊற்றும்போது, இந்த அற்புதம் நிகழும்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. வேதாகமத்தில், எண்ணெயும் பாத்திரமும் எதற்கு அடையாளமாக இருக்கிறது?**

**அப்போஸ்தலர் 9:15.** *அதற்குக் கர்த்தர்: நீ போ; ____________ ... நான் தெரிந்துகொண்ட ____________________ யிருக்கிறான்.*

**1சாமுவேல் 16:13.** *அப்பொழுது சாமுவேல்: தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர்நடுவிலே அபிஷேகம்பண்ணினான் ... கர்த்தருடைய ___________________ தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்.*

**குறிப்பு:** தேவன் ஒரு குயவன் என்றும், நாம் களிமண் என்றும் வேதாகமம் கூறுகிறது. எரேமியா 18:1–6; ரோமர் 9:20,21. எல்லாரையும் ஒரு நோக்கத்தோடு அவர் சிருஷ்டித்திருக்கிறார். வேதாகமம் முழுவதிலும் எண்ணெயானது தேவஆவியானவரைச் சுட்டிக்காட்டும் அடையாளமாகப் பயன்பட்டுள்ளது. எபிரெய தேவாலயத்தில் விளக்கு பிரகாசமாக எரிவதற்குச் சுத்தமான ஒலிவ எண்ணெய் பயன்பட்டது; தேவ பரிசுத்த ஆவியானவர் நம் மனக்கண்களை எவ்வளவாகப் பிரகாசமாக்குகிறார் என்பதற்கு அடையாளமாக அது இருந்தது. தம்முடைய மக்கள் ஒவ்வொருவரையும் தம் ஆவியால் நிரப்பவேண்டும் என்பதுதான் தேவனுடைய ஆசை. யோவேல் 2:28.

**2. பரிசுத்த ஆவி என்பது வெறும் சக்தியா, அல்லது தேவனா?**

**அப்போஸ்தலர் 5:3,4.** *பேதுரு அவனை நோக்கி, "அனனியாவே, ... ______________ _____________________ பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? ... நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய்" என்றான்.*

**எபேசியர் 4:30.** *அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்றும் முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் _____________________________.*

**குறிப்பு:** பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொன்னது தேவனிடத்தில் பொய்சொன்னது ஆகும் என்று பேதுரு கூறினார். மேலும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்படி இயேசு நமக்குச் சொல்லியுள்ளார். மத்தேயு 28:19,20. அதன்மூலம், தேவத்துவத்தின் மூன்றாம் நபர் பரிசுத்த ஆவியானவர் என்பதும், பிதாவுக்கும் குமாரனுக்கும் சமமானவர் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆவியானவரை நாம் துக்கப்படுத்தக்கூடும் என்று வேதாகமம் கூறுகிறது; எனவே அவருக்கு உணர்ச்சிகள் இருப்பது தெரிகிறது. அவர் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியல்ல. வேதாகமத்தில் தேற்றரவாளன், பரிசுத்த ஆவி, பரிசுத்த ஆவியானவர், சத்திய ஆவி, ஆவி என்றெல்லாம் பரிசுத்த ஆவியானவர் அழைக்கப்படுகிறார். அவர் ஒரு நபர் என்பதைத்தான் இந்தப் பெயர்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**3. பரிசுத்த ஆவியானவரின் முதன்மையான வேலை என்ன?**

**யோவான் 16:13.** *சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை ____________________; அவர் ... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு ____________________.*

**யோவான் 14:26.** *என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் _________________, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.*

**குறிப்பு:** எப்போதும் நம்மோடிருப்பதாக இயேசு வாக்குரைக்கிறார். ஆவியானவர் மூலமாகவே அவர் நம்மோடும் நம்மிலும் இருக்கிறார். யோவான் 14:17.

**4. மன்னிக்கப்படாத பாவம் என்ன?**

**மத்தேயு 12:32.** *எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு _________________ பேசினால் அது ... அவனுக்கு மன்னிக்கப்_________________.*

**குறிப்பு:** பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம் என்பது, ஒரு வகையான பாவம் அல்ல; மாறாக, சத்தியத்தைத் தொடர்ந்து மறுதலித்து, கடைசியில் தேவ சித்தத்தை முற்றிலும் புறக்கணிப்பதாகும். எபிரெயர் 10:26,27. பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கவே முடியாதபடி அவருடைய உணர்த்துதல்களை ஒருவர் தொடர்ந்து புறக்கணித்து வரும்போது மனச்சாட்சி மரத்துப் போகிறது. எனவே, 'மன்னிக்கப்படாத பாவத்தை' தான் செய்துவிட்டேன் என்று யாராவது பயந்தால், அவர் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில்தான் இருக்கிறார்.

## 5. ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆவியின் வரங்கள் சில யாவை?

**1கொரிந்தியர் 12:8–10.** *எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ____________________ போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு ... ____________________ உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு ... ____________________, வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே ____________________வரங்களும், வேறொருவனுக்கு ____________________ செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் ____________________ உரைத்தலும், வேறொருவனுக்கு ____________________ பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல ____________________ பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.*

**குறிப்பு:** பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்க்கையில் வரும்போது வெவ்வேறு வரங்களைத் தருகிறார். ஒரேவிதமான வரத்தை எல்லாரும் பெறுவதில்லை. 1கொரிந்தியர் 12:29–31. ஆவியால் நிரப்பப்படுவது முக்கியமென்று வேதாகமம் அடிக்கடி வலியுறுத்துகிறது. "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்று யோவான் 3:5 இல் இயேசு சொல்லியிருக்கிறார். ஆனால், பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும் அவருடைய வேலைபற்றியும் பெரும்பாலும் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதுதான் வருத்தகரமானது. பரிசுத்த ஆவி ஒரு சக்தி என்று சிலர் போதிக்கிறார்கள்; மக்களின் அனுதின வாழ்க்கையில் அவர் தாக்கத்தை ஏற்படுத்துவதை சிலர் மறுக்கிறார்கள்; பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் ஒவ்வொருவரும் அந்நியபாஷைகளில் பேசவேண்டும் என்று வேறுசிலர் போதிக்கிறார்கள்.

## 6. எந்த ஆவிக்குரிய வரம் கொரிந்து சபையில் சர்ச்சையை ஏற்படுத்தியது?

**1கொரிந்தியர் 14:1,2.** *ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள். ஏனெனில், ____________________ பேசுகிறவன், ... மனுஷரிடதில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான்.*

**குறிப்பு:** ஆதிகால கிறிஸ்தவ சபையின் நாட்களில் இருந்ததுபோலவே, அந்நியபாஷையின் வரம் பெரும் குழப்பத்தையும் சர்ச்சையையும் ஏற்படுத்தி வருகிறது. அதனால்தான், அந்த ஆவிக்குரிய வரம்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை அறிய இந்தப்பாடத்தில் பெரும்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 7. பூமியெங்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்க தம்முடைய சீடர்களுக்குத் தாம் எவ்வாறு உதவுவதாக இயேசு வாக்குரைத்தார்?

**மாற்கு 16:17.** *நவமான ____________________ பேசுவார்கள்.*

**குறிப்பு:** வேதாகமத்தில், 'அந்நியபாஷை' என்று சொல்லப்படும் வார்த்தைக்கு 'பாஷை' என்றுதான் அர்த்தம். இயேசுவின் சீடர்கள் புத்திசாலிகள்; ஆனால் அவர்களில் அநேகர் கல்வியறிவு இல்லாதவர்கள். சுவிசேஷத்தை அவர்கள் உலகம்முழுவதிலும் எடுத்துச்செல்வதற்கு, அவர்கள் இதுவரையிலும் அறிந்திராத ஒரு தெய்வீக வரத்தை அதாவது அந்நிய பாஷையின் வரத்தை அவர்களுக்குக் கொடுப்பதாக இயேசு வாக்குரைத்தார்.

## 8. பரிசுத்த ஆவியானவர் சீடர்கள்மேல் ஊற்றப்பட்டபோது, என்ன நிகழ்ந்தது?

**அப்போஸ்தலர் 2:1,4.** ____________________ *என்னும் நாள் வந்தபோது, ... அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு ____________________ பேசத்தொடங்கினார்கள்.*

**குறிப்பு:** பெந்தேகொஸ்தே என்பது யூதர்களின் பரிசுத்த நாள்; பஸ்காபண்டிகை முடிந்து கிட்டத் தட்ட 50 நாட் களுக்குப்பிறகு அதைக் கொண்டாடினார்கள். உலகம் முழுவதிலுமிருந்த யூதர் கள் தேவனைத் தொழுதுகொள்வதற்காக எருசலேமிற்கு வந்தார்கள். இந்த மக்களுக்கு அவரவருடைய மொழிகளில் சுவிசேஷத்தைச் சொல்வதற்கு, தம்முடைய ஆவியானவர் மூலம் தேவன் தம்முடைய சீடர்களுக்கு அப்போது அந்நியபாஷையின் வரத்தைக் கொடுத்தார். அங்கு விசுவாசிகளானவர்கள், தாங்கள் அறிந்த நற்செய்தியைத் தங்களுடைய நாடுகளுக்குத் திரும்பிச்சென்று, அங்கு பகிர்ந்துகொண்டார்கள்.

## 9. பிற தேசங்களிலிருந்து வந்திருந்த யூதர்கள் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டபோது என்ன உணர்ந்தார்கள்?

**அப்போஸ்தலர் 2:11.** *நம்முடைய ____________________ இவர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக்_________________________ என்றார்கள்.*

**குறிப்பு:** அந்நியபாஷையின் வரம் ஒரு 'பரலோக பாஷை' என்றும், தேவனும் மொழிகளுக்கு அர்த்தம் சொல்லும் வரம்பெற்றவர்களும் மட்டும்தான் விளங்கிக்கொள்ள முடியும் என்றும் சொல்கிறார் கள். ஆனால், அன்று பிரசங்கிக்கப்பட்டவற்றை அதாவது, 'தேவனுடைய மகத்துவங்களை' கேட்டுக்கொண்டிருந்தவர்கள் அனைவரும் புரிந்துகொண்டார்கள் என்று வேதாகமம் தெளி வாகச் சொல்கிறது. அந்நியபாஷை பேசுவதுபற்றி வேதாகமத்தில் மூன்றே மூன்று இடங்களில் தாம் சொல்லப்பட்டுள்ளது. அதில் முதலாவதைப் பார்த்தோம்; அந்த வரம்பற்றித் தெளிவான ஒரு காட்சியைப் பெற கடைசி இரண்டையும் இப்போது ஆராய்வோம்.

## 10. கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் பேதுரு பிரசங்கித்த போது என்ன நிகழ்ந்தது?

**அப்போஸ்தலர் 10:44–46.** *இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக் கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி னார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் ______________ ____________________ (கேட்டார்கள்).*

**குறிப்பு:** கொர்நேலியு இத்தாலியாப் பட்டாளத்தைச் சேர்ந்தவர் (அப்போஸ்தலர் 10:1); ஆனால் பேதுரு ஒரு யூதர், அரமேய்க் மொழி பேசியவர். ரோமக் குடிமக்கள் உலகின் எந்தப் பகுதியிலி ருந்தும் வேலைக்காரர்களை வைத்துக்கொள்ளலாம் என்று வரலாறு உறுதிப்படுத்துகிறது. அதனால்தான், அந்தக் கூட்டத்தில் மொழி ஒரு பெரிய தடையாக இருந்தது. ஆனாலும், கொர் நேலியுவின் மேலும் அவனுடைய வீட்டார்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கியபோது, அவர்கள் தங்கள் தாய்மொழிகளில் பேசாமல், வேறு பாஷைகளில் பேசினதை பேதுருவோடு வந் திருந்தவர்கள் கண்டார்கள். அந்தப் பாஷைகளினால் அவர்கள் 'தேவனைப் புகழ்ந்தார்கள்'. இந்த அனுபவத்தை பின்னர் எருசலேமின் சபைத் தலைவர்களிடம் பேதுரு அறிவித்தபோது, "பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார்" என்று சொன்னார். அப்போஸ்தலர் 11:15. பெந்தெகொஸ்தே நாளில் சீடர்கள் பெற்ற அதே அந்நியபாஷை வரத்தை கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் பெற்றார்கள்.

## 11. எபேசுவைச் சேர்ந்த 12 சீடர்களுக்கு பவுல் பிரசங்கித்தபோது என்ன நிகழ்ந்தது?

**அப்போஸ்தலர் 19:6.** *பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசித் ____________________________ சொன்னார்கள்.*

**குறிப்பு:** அப்போஸ்தலர்களிலேயே பவுல் அதிகம் படித்தவர்; அதிகமாகப் பயணம் சென்றவர்; அவருக்குப் பல பாஷைகள் தெரியும். 1கொரிந்தியர் 14:18. எபேசுவின் அந்தப் பன்னிரு மனிதர் கள்மேலும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டபோது, அவர்களுக்குத் தெரிந்திராத பாஷை களில் அவர்கள் தீர்க்கதரிசனம்சொன்னதை பவுலும் லூக்காவும் கேட்டார்கள்.

## 12. புரியாத பாஷையில் பேசுவதுபற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?

**1கொரிந்தியர் 14:9.** *நீங்களும் ________________ பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்?*

**1கொரிந்தியர் 14:19.** *அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதி னாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களை ________________ என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்.*

**குறிப்பு:** பிறரோடு தொடர்புகொள்ளவும் சத்தியத்தைப் போதிக்கவும் பாஷை பயன்படுகிறது என்று பவுல் மீண்டும்மீண்டும் கூறுகிறார். 'அந்நிய' என்பதற்கான கிரேக்க வார்த்தை மூலவேதாகமப் பிரதிகள் எதிலும் காணப்படவில்லை; வந்திருந்த பெரும்பாலானவர்களுக்குப் புரியாத பாஷை யாக இருந்ததால், 'அந்நிய' எனும் வார்த்தையை மொழிபெயர்ப்பாளர்கள் சேர்த்துள்ளார்கள். பல்வேறு தேசங்களைச் சேர்ந்தவர்கள் கொரிந்து சபையில் கூடினார்கள்; மற்றவர்களுக்குப் புரியாத பாஷைகளில் சபை விசுவாசிகள் ஜெபித்தபோதும், சாட்சிசொன்னபோதும், பிரசங்கித்த போதும் சபை ஆராதனைகளில் குழப்பங்கள் ஏற்பட்டன. அதனால்தான், பெரும்பாலானவர் களுக்குப் புரியாத பாஷையில் பேசுகிறவர்கள், அதற்கு அர்த்தம் சொல்வதற்கு ஆளில்லாவிட் டால் அமைதியாக இருக்கும்படி பவுல் கட்டளையிட்டார். 1கொரி 14:28. கூடியிருக்கும் மற்றவர் களுக்குப் புரியாத பாஷையில் நாம் பேசவோ, ஜெபிக்கவோ கூடாது என்பதுதான் இதில் நமக்குள்ள பாடம்.

## 13. முற்காலப் பாபிலோனின் முக்கியக் குணநலன்களில் ஒன்று என்ன?

**ஆதியாகமம் 11:7,9.** *நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் ____________________ என்றார் ... தாறுமாறாக்கினபடியால், அதின் பேர் __________ என்னப்பட்டது.*

**குறிப்பு:** உலகத்தின் பாஷைகள் முதன்முதலாகக் குழப்பத்திற்குள்ளானது பாபேல் கோபுரத்தில் தான். பாபேல் என்பதற்கும், பாபிலோன் என்பதற்கும் எபிரெய வார்த்தை 'பாபேல்'தான்; அதற்குக் 'குழப்பம்' என்று அர்த்தம். வெளிப்படுத்தல் 18இல், தேவன் தம்முடைய மக்களை ஆவிக்குரிய பாபிலோனிலிருந்து வெளியேறும்படி அழைக்கிறார். பாஷைகளின் தாறுமாறு ஆவிக்குரிய பாபிலோனின் ஒரு குண இயல்பாகும்.

## 14. வேண்டுமென்றே தேவகட்டளையை மீறுகிறவர்களை ஆவியானவர் நிரப்பு வாரா?

**யோவான் 14:15-17.** *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் __________________ கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது ... __________ ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.*

**அப்போஸ்தலர் 5:32.** *தேவன் தமக்குக் ________________________ தந்தருளின பரிசுத்த ஆவி.*

**குறிப்பு:** தேவகட்டளைக்குக் கீழ்ப்படிய மறுப்பவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவரின் ஈடு இணையற்ற வல்லமை வாசஞ்செய்ய முடியாது.

## 15. நாம் எந்த ஆவிக்குரிய வரத்தை விரும்பவேண்டுமென்று பவுல் வலி யுறுத்துகிறார்?

**1 கொரிந்தியர் 14:4,5.** *அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்; தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் ... ________________ சொல்லுகிறவன் அவனிலும் (அந்நியபாஷை பேசுகிறவனிலும்) மேன்மையுள்ளவன்.*

**1கொரிந்தியர் 14:12.** *நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், ____________ ______________ உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும் படி நாடுங்கள்.*

**குறிப்பு:** அந்நியபாஷை வரத்தைவிட, தீர்க்கதரிசன வரத்திற்கு பவுல் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆனாலும், பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கும் ஒவ்வொருவரும் அந்நிய பாஷையில் பேசுவார்கள் என்று சிலர் இப்போது போதித்துவருகிறார்கள். தேவன் தம் ஆவி யானவரால் தம் மக்களை நிறைத்த 25 அனுபவங்கள் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளன; அவற்றில் மூன்றே மூன்று சம்பவங்கள்தாம் அந்நியபாஷை வரத்தோடு சம்பந்தப்பட்டுள்ளன. அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டில் 14 புத்தகங்கள் எழுதியுள்ளார்; அவற்றில் ஒன்றே ஒன்றில் அதாவது 1கொரிந்தியரில் மாத்திரம்தான் அந்நியபாஷைபற்றிக் குறிப்பிடுகிறார். புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் மூன்றே மூன்று புத்தகங்கள்தாம் அந்நியபாஷை பேசுதல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

### 16. தேவன் தம் மக்களை முக்கியமாக எதற்காகத் தம்முடைய ஆவியினால் நிரப்புகிறார்?

**அப்போஸ்தலர் 1:8.** *பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் ____________________, ... எனக்குச் ________________________________ என்றார்.*

**அப்போஸ்தலர் 4:31.** *அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ_____________________ _____________________ சொன்னார்கள்.*

**குறிப்பு:** நாம் சாட்சிபகர்வதற்கான வல்லமையைத் தருவதற்காக தேவன் தம்முடைய ஆவியால் நம்மை நிரப்புகிறார்.

### 17. ஒருவர் பரிசுத்த ஆவியால் நிறைந்துள்ளாரா இல்லையா என்று சொல்ல முடியுமா?

**மத்தேயு 7:20.** *அவர்களுடைய ________________________ அவர்களை அறிவீர்கள்.*

**குறிப்பு:** ஆவியின் வரங்களை வைத்து அல்ல, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய ஆவியின் கனியை வைத்துத்தான் ஒருவர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறார் என்று நாம் தீர்மானிக் கிறோம். கலாத்தியர் 5:22,23.

### 18. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை நான் எவ்வாறு பெற்றுக்கொள்ள லாம்?

**லூக்கா 11:13.** *பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் _____________________கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா.*

**குறிப்பு:** ஆவியானவரை இயேசு பரிபூரணமாகப் பெற்றிருந்தார்; அதுபோல நாமும் நம் பாத்திரங் கள் நிரம்பிவழிய நம்மை நிரப்புமாறு தேவனிடம் கேட்கலாம். ஆனால், முதலில் நாம் நம் இரு தயங்களை ஆண்டவரிடம் அர்ப்பணித்து நம்மை வெறுமையாக்க ஆயத்தமாக வேண்டும்.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

பரிசுத்த ஆவி எனும் விலையேறப்பெற்ற தைலத்தை உங்கள் வாழ்க்கையில் ஊற்ற இயேசு ஏக்கத்தோடு காத்திருக்கிறார். உங்கள் மனதையும் இருதயத்தையும் ஆட்கொள்ள இப்போதே அவரிடம் கேட்பீர்களா?

**பதில்:** ________________________________________

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com